IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.243/2008
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.05 PM.

<u>வா.சா.2 சாட்சி மகேந்திரன் த.பெ.செண்பகமூர்த்தி</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 11.02.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>1 , 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நீதிமன்றத்தில் அழைப்பாணை வரபெற்று சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதியின் அழைப்பாணையின் பேரில்தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் வாதியின் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது.

2. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். வாதியை எப்படி தெரியும் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தாவா சொத்து எனக்கு பூர்வீக பாத்தியப்பட்டதா என்றால் எனது தகப்பனார் இடம். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 2, 3 சர்வே எண் உள்ளது. 1ம் பிரதிவாதி வகையறாவுக்கு பாத்தியமான இடம் எங்களது தோட்டத்திற்கு எந்தபுறம் உள்ளது என்றால் மேற்கு பக்கம் பெருமாள்பட்டி எல்லையில் உள்ளது.

3. எனது தோட்டத்தை யார் பராமரித்து வருகிறார்கள் என்றால் நான்தான் பராமரித்து வருகிறேன். மேற்படி தோட்டம் என்னுடையது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படடுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் மதுரையில் ஜெய்கிந்துபுறத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பிறந்ததிலிருந்தே ஜெய்கிந்துபுறத்தில்தான் குடியிருந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி எனக்கு எப்போது தெரியும் என்றால் 30 வருடங்களாக தெரியும்.

4. 1ம் பிரதிவாதியின் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் சிங்கராஜ், பால்பாண்டி, ஊமை என்ற அழகர்சாமி, துரைப்பாண்டி. எனது நிரூபண வாக்குமூலத்தில் உச்சப்பட்டிக்கு எங்கு சென்றேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. உச்சப்பட்டியில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்பதை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு விவசாயம் நிலம் உள்ளதால் காலை 10 மணி முதல் மாலை வரை இருந்தேன்.

5. எனது நிரூபண வாக்குமூலத்தில் சிங்கராஜ் மற்றும் போஸ் கிரைய ஒப்பந்தத்தை என்னிடம் காண்பித்தார்கள் என்றால் சரிதான். எழுதப்பட்ட கிரைய பத்திரத்தை படித்துபார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். கிரைய பத்திரத்தில் 1வது சாட்சி கையெழுத்து யார் போட்டார்கள் என்றால் எனக்கு தெரியும் செல்வம். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். பூர்வீக பாத்தியப்பட்ட இடத்தை 1ம் பிரதி சிங்கராஜுக்கு கிரையம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியுடன் உச்சப்பட்டிக்கு நான் செல்லவே இல்லை இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. சிங்கராஜ் எனது முன்னிலையில் கிரைய ஒப்பந்தத்தில் கையெழுத்து

செய்யவில்லை என்றால் சரியல்ல. சிங்கராஜ் மற்றும் போஸ் எனது முன்னிலையில் கையெழுத்து செய்தார்கள். வாதிக்கு ஆதரவாக இந்த நீதிமன்றத்தில் பொய்யாக தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்தார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. சிங்கராஜ்க்கு முழு சொத்தையும் கிரையம் பேசுவதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 12.20 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.11 09:49:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.